

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 வது பிறந்த தினத்தை முன்னிட்டு விருதுநகரில் அவரது திருவுருவச் சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர் .

### மழலைச் செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு பசியாற உணவும் தரும்

# உன்னத ஆட்சி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 16 -

மழலைச் செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு, அவர்கள் பசியாற உணவும் தரும் உன்னத ஆட்சி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து 15.6.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் இன்று திகழ்கிறதென்றால், அதற்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களே முக்கிய காரணமாகும். தமிழ்நாடு முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே மக்கள் நலன் காக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். விடியல் பயண திட்டத்தின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பஸ் பயணம் என்னும் திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று நாடு முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த திட்டத்தை மற்ற மாநிலங்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, செயல்படுத்த தொடங்கியுள்ளன.



தினகரன்

ஜூலை 15, 2024 திங்கட்கிழமை

பசியாற்றும் முதல்வர்

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் இன்று திகழ்கிறதென்றால், அதற்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களே முக்கிய காரணமாகும். தமிழ்நாடு முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே மக்கள் நலன் காக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். விடியல் பயண திட்டத்தின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பஸ் பயணம் என்னும் திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று நாடு முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த திட்டத்தை மற்ற மாநிலங்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, செயல்படுத்த தொடங்கியுள்ளன. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கலை...

இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ், பெண்களுக்கு மாதம் ரூ.1000 உரிமை தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. புதுமைப்பெண் திட்டம், மகளிர் திருமண நிதியுதவி திட்டம், பணியாற்றும் மகளிருக்கு சமூக நலத்துறையின் கீழ் 'தோழியர் விடுதிகள்' என இந்த திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு என தீட்டப்படும் நல்ல திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இந்த அரசின் திட்டங்கள் ஏராளம்.

தமிழக முதல்வரின் கனவு திட்டமான 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கி, தகைசால் பள்ளிகள் திட்டம், ஊட்டசத்து குறைபாடு இல்லாத மாணவர்களை உருவாக்கும் திட்டம், இல்லம் தேடி கல்வி என பல திட்டங்கள் மாணவ, மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்தி வருகிறது. அந்த வகையில் தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், இந்த திட்டங்களுக்கு எல்லாம் சிகரமாக திகழ்கிறது. படிக்கிற காலத்தில் காலை உணவின்றி மாணவர்கள் பள்ளிக்கு வருவது தடைபடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 1592022ம் தேதியன்று காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அத்திட்டத்தில் 1545 அரசு பள்ளிகளை சேர்ந்த ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன் பெற்றனர். மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பு காரணமாக தமிழகத்தில் உள்ள 30 ஆயிரத்து 992 தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அதன் வாயிலாக அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 18 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயன் பெற்றனர். இத்திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுப்படுத்த மாட்டார்களா என்கிற ஏக்கம், அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோருக்கும் இருந்து வந்தது.

அந்த குறையையும் தீர்க்க இதோ திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் இன்று முதல், அத்திட்டத்தின் அடுத்தக்கட்ட நகர்வை முன்னெடுக்கிறார். காமராஜர் பிறந்த நாளான இன்று தமிழகத்தில் உள்ள 3 ஆயிரத்து 995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இன்று முதல் காலை உணவு திட்டத்தில் 2 லட்சத்து 23 ஆயிரம் குழந்தைகள் கூடுதலாக பயன்பெற உள்ளனர்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் அருகே கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் தமிழக முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார். தமிழகத்தில் இனிமேல் தொடக்கப் பள்ளி மாணவர்கள் காலை, மதிய உணவுகள் குறித்த எவ்வித கவலையுமின்றி பள்ளிகளுக்கு சென்று பாடங்களை படிக்கலாம். தொடக்க கல்வியை நாடிவரும் மழலை செல்வங்களுக்கு எழுத்தறிவித்தலோடு, அவர்கள் பசியாற உணவும் தரும் உன்னத ஆட்சி, இந்தியாவிலே தமிழகத்தில் மட்டுமே உள்ளது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# 'தினமலர்' இட்டுக்கட்டிய பொய்ச் செய்தி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, ஜூலை 16 -

தினமலர் இட்டுக்கட்டிய பொய்ச் செய்திக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி தொகுதி நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தினமலர் சென்னைப் பதிப்பில் நேற்று முன்தினம் (14.07.2024) வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறானது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வந்தவுடன் மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ கட்சி நிர்வாகிகளிடம், "தி.மு.க. நிர்வாகிகள் முழுமையாக ஒத்துழைத்திருந்தால் கூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருப்பேன்" என்று கூறியதாகவும், இந்தத் தகவல் பரவி தி.மு.க. வினருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

தேர்தல் வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சியினருக்கு திருச்சி காஜாமலையில் நன்றி தெரிவிக்கும் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.



நேரு, துரை வைகோவுக்கு பதிலடி கொடுத்துப் பேசினார்" என்று தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது வருத்தம் அளிக்கிறது. இது கண்டனத்துக்குரியது.

தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி சார்பில் திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் மறுமலர்ச்சி தி.மு.க. வேட்பாளராக துரை வைகோ போட்டியிட வாய்ப்பளித்து வெற்றியை ஈட்ட முழு முதல் காரணமானவர் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் என்பதை மறுமலர்ச்சி தி.மு.க. நன்றி பாராட்டுகிறது.

திருச்சியில் மூன்று இலட்சத்திற்கு மேல் வாக்கு வித்தியாசத்தில் துரை வைகோ வெற்றி பெற, அன்புச் சகோதரர் அமைச்சர் கே. என்.நேரு அவர்களின் பங்களிப்பும், உழைப்பும் அளவிடற்கரியது.

அதேபோல அமைச்சர் தம்பி மகேஷ் பொய்யாமொழி மற்றும் அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் மற்றும் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகளின் உழைப்பும் தேர்தல் பணிகளும் நன்றிக்கு உரியன ஆகும்.

இதனை தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த நேரத்திலிருந்து ஊடகங்களுக்கும், ஏடுகளுக்கும் அளித்த நேர்காணல்களில் எடுத்துரைத்துதுரைவைகோ தி.மு.க.விற்கு இதயமார்ந்த நன்றியைக் கூறினார்.


ஆனால் தினமலர் ஏடு சென்னைப் பதிப்பில் இட்டுக்கட்டி செய்தி வெளியிட்டு இருப்பது பத்திரிக்கை தர்மம் ஆகாது.

தினமலர் சென்னைப் பதிப்பில் இது போன்ற செய்திகளைப் பரப்பி அவதூறு செய்து திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் பிரச்சினை உருவாக்க வேண்டும் என்று கருதினால் அந்த நினைப்பில் மண் விழும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயகத்தின் காவல் அரண்களாகத் திகழும் பத்திரிக்கை ஊடகங்கள் அறநெறி தவறி செய்திகளை வெளியிடும் போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# உலகைப் படித்த ஒப்பற்ற மேதை!



கொம்புத்தேன் பேச்சல்ல, எளிய பாணி!
கோமளப்பூஞ் சிவப்பல்ல, கருப்பு மேனி!
தும்பைப்பூக் கதராடை! முழங்கா லைப்போய்த்
தொடுகின்ற மழைக்கைகள்! படர்ந்த நெற்றி!
தெம்புக்குத் தெம்பூட்டும் நிமிர்ந்த திண்டோள்!
தேசத்தை நினைந்துருகும் வெளிச்சக் கண்கள்!
கம்பீரத் திருத்தோற்றம்! ஏழை நேசர்!
"கல்விக்கண் திறந்தமகன்" காம ராசர்!

கார்முகிலாய் பொதுவாழ்வில் மக்கள் மீது
கருணைமழை பொழிந்தவர்நம் காம ராசர்!
சீர்மிகுந்த ஆட்சிசெய்த காம ராசர்!
சிறைக்கொடுமை அனுபவித்த காம ராசர்!
வீரர்களைப் போற்றிநின்ற காம ராசர்!
விடுதலைப்போர்த் தியாகியன்றோ காம ராசர்!
பார்புகழும் பெருந்தலைவர் காம ராசர்!
" படிக்காத மேதை"எங்கள் காம ராசர்!

நதிநீரைச் சேகரிக்க அணைகள் கட்டி
நாட்டுமக்கள் துயர்தீர்த்த காம ராசர்!
புதியபல பாலங்கள் கட்டித் தந்து
போக்குவரத்து இடர்தீர்த்த காம ராசர்!
"மதியஉண வுத்திட்ட" அன்னம் இட்டு
மாணவரின் பசிதீர்த்த காம ராசர்!
முதலமைச்சர் பொறுப்புக்கே பெருமை சேர்த்த
"முதல், முதல் அமைச்சர்" எங்கள் காம ராசர்!

அருள்மிகுந்தார் இவர்தந்தை குமார சாமி!
அன்புத்தாய் சிவகாமி! இவர்கள் பெற்றுத்
தரமகிழ்ந்து சிலிர்த்ததுநம் அன்னை பூமி!
தலைவர்களே விருதுகளைப் பெறுவார்! ஆனால்
விருதுநகர் "நம்காம ராச ரையே"
விருதாகப் பெற்றநக ரன்றோ! இந்தப்
பெருமை,புகழ் குலுக்கலிலே கிடைத்த ஒன்றோ?
பேருழைப்புத் தியாகத்தின் பரிசே யன்றோ!

பனையேறும் குடும்பத்தில் பிறந்தார்! ஆனால்
பலர்ஏறி, மேல்உயர ஏணி யானார்!
மனைமக்கள் இவர்வாழ்வில் இல்லை! நாட்டு
மக்களைக் கரைசேர்க்கும் தோணி யானார்!
சுனைநீராய் பயன்பட்டுத் தொண்டு செய்தார்!
சுதந்திர நெருப்பில், நெய் யானார்! எள்ளின்
முனையேனும் சுயநலம்பார்த் தாரா? கண்கள்
மூடும்வரை பிறர்க்கென்றே வாழ்ந்து போனார்!

ஓலையிட்ட குடிசைகளின் பிள்ளை கட்கும்
உணவளித்த பெருந்தகை!இன் றிருந்தால், கல்விச்
சாலையெங்கும் யுகப்புரட்சி செய்யும் எங்கள்
"தளபதியை" தமிழ்நாட்டின் பள்ளி யெங்கும்
"காலைஉண வுத்திட்டம்" கொண்டு வந்த
கலைஞரின் திருமகனை உச்சி மோந்து
மாலையிட்டு அரவணைத்தே மகிழ்ந்தி ருப்பார்!
"மகனே!நீ வாழ்க!"வென நெகிழ்ந்தி ருப்பார்!

படிக்காத மேதை!இவர் போல்உ ணர்ந்துப்
படித்தவர்கள் யாருமில்லை உலகை! மோகம்
பிடிக்காத வர்!இவர்போல் தேச பக்தி
பிடித்தவர்கள் யாருமில்லை! செல்வம் சேர்க்கத்
துடிக்காத வர்!இவர்போல் விடுத லைக்குத்
துடித்தவர்கள் யாருமில்லை! தேநீர் கூட
குடிக்காத மனிதர்!இவர் போல்க ரைத்துக்
குடித்தவர்கள் அரசியலை, எவரும் இல்லை!

விளைத்தெங்கும் இவர்சொத்து சேர்க்க வில்லை!
வெளிநாட்டில் பணம்போட்டுக் குவிக்க வில்லை!
வளைத்தெங்கும் மாளிகைகள் கட்ட வில்லை!
வாடகைக்கே குடியிருந்தார் வாழ்நா ளெல்லாம்!
இளைத்துப்போ னார்!இதயம் வெடித்துப் போனார்!

இந்தியா "நெருக்கடியால்" இருண்ட நேரம்
களைத்துப்போ னார்!ஆமாம், "கலைஞர்" கைமேல்
கைவைத்துத் "தாய்நாட்டைக் காப்பாற்" றென்றார்!

பூவைத்து, மலர்வளையம் வைத்துக் கண்ணீர்
பொழிந்துவிட்டுச் சிலர்சென்றார்! புகழு டம்பில்
மூவர்ணக் கொடிபோட்டுப் போர்த்தி விட்டு
" முடிந்ததுநம் கடமை"யெனச் சிலபேர் சென்றார்!
தாய்வைத்த இதயத்தைக் கொண்டி லங்கும்
"தலைவர்நம் கலைஞர்"தாம், உண்மை யான
நேயத்தில் கிண்டியிலே "காம ராசர்
நினைவிடத்தை" உருவாக்கிப் பெருமை சேர்த்தார்!

வரும்தலைவர் போம்தலைவர் நாட்டில் உண்டு!
வாழ்ந்தசுவ டில்லாத தலைவர் உண்டு!
தரும்தலைவர், பெறும்தலைவர் அதிகம் உண்டு!
தலைவர்களில் இந்நாடு வணங்கிப் போற்றும்
"பெருந்தலைவர்" உயர்காம ராசர் அன்றோ!
பிறர்க்காக வாழாமல், உழைத்தி டாமல்
திரிந்தலைவர் சிலர்தலைவர் ஆவ தற்கே!
தெப்பமெல்லாம் கப்பலென்றால் ஒப்பு வோமா?

ஏழ்மைநிறை குடும்பத்தின் பிள்ளை யாகி
இளம்வயதில் தந்தையினை இழந்து வாடி
ஊழ்வினைஎன் றிருக்காமல் தியாகம் செய்தே
உழைத்துயர்ந்து தமிழ்நாட்டின் முதல்வ ராகித்
தாழ்வதற்றும் விடுதலைப்போர்க் "கர்ம வீரர்"
தலைவர்களை உருவாக்கும் தலைவர் ஆகி
வாழ்வைஇந்த நாட்டுக்கே அர்ப்ப ணித்து
வருங்காலத் தலைமுறைக்கும் வரலா றானார்!

காற்றாண்டு கொண்டிருக்கும் இவ்வை யத்தின்
கல்வெட்டில் சிலர்பெயரே நிலைத்தி ருக்கும்!
நூற்றாண்டு கள்கடந்தும் காம ராசர்
நூலகத்தில் மட்டுமல்ல, தாய கத்தில்
மாற்றாரின் நெஞ்சகத்தும் குடிகொண் டுள்ளார்!
மகத்தான பெருந்தலைவர் பிறந்த நாளில்
ஏற்றுக்கொள் வோம்சபதம்! "மனித நேயம்"
இறுதிவரை வெற்றிபெற உறுதி ஏற்போம்!



கவிச்சுடர்
**கவிதைப் பித்தன்**

# திராவிட மாடல் அரசுக்கு கிடைத்திருக்கும் மற்றொரு அங்கீகாரம்!

## ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி அறிக்கை!

சென்னை, ஜூலை 16 -

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் அன்னியூர் சிவா 1,24,053 வாக்குகள் பெற்று 67,757 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளதற்கு மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

பல அவதூறுகளை கடந்து திமுகவுக்கு கிடைத்திருக்கும் இந்தமாபெரும் வெற்றி என்பது திராவிட மாடல் அரசின் திட்டங்களுக்கு கிடைத்திருக்கும் வெற்றியாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் சிறந்த முறையில் நடைபெற்று வரும் ஆட்சிக்கு கிடைத்திருக்க கூடிய மற்றொரு அங்கீகாரம் என்பதில் ஐயமில்லை.

இத்தேர்தலில் மற்ற கட்சிகள் பெற்றிருக்கும் வாக்குகளை கவனிக்கும் போது,



திமுக தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு அருகில் கூட மற்ற கட்சிகள் நெருங்க இயலாத நிலை உள்ளது என்பது தெரிகிறது. இந்த சிறப்பான வெற்றியை ஈட்டியுள்ள முதல்வர் தளபதியார் அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அது போல் களத்தில் முன் நின்று பரப்புரையை முன்னெடுத்த சகோதரர் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது தலைமையில் சிறப்பாக பணியாற்றிய அமைச்சர் பெருமக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்கள், இந்தியா கூட்டணியை சேர்ந்த நிர்வாகிகள் என அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊசலாட்டத்திற்கு இடமின்றி உறுதியான ஆதரவை வாக்குகளாக அளித்த விக்கிரவாண்டி வாக்காளர்களுக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு மு.தமிமுன் அன்சாரி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கர்மவீரர் காமராஜர் அவர்களின் 122 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திருவுருவசிலைக்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.நிகழ்வில் மேயர் பொறுப்பு ராஜ், வழக்கறிஞர் தினேஷ், மாநகர துணை அமைப்பாளர் பிரபு பாண்டியன், மண்டல தலைவர் மகேஸ்வரி மாமன்ற உறுப்பினர்கள் கிட்டு என்ற ராமகிருஷ்ணன், கந்தன், சுதாமூர்த்தி, கோகிலவாணி, சுரேஷ்,டாக்டர்.சங்கர், பேச்சியம்மாள், பொன்மாணிக்கம் ஜான், சுப்பிரமணியன், அலி ஷேக் மன்சூர், ஜெகநாதன், அல்லா பிச்சை, மாரியப்பன், ரவீந்தர், சின்னத்தாய் கிருஷ்ணன், வழக்கறிஞர் சுந்தர், நித்திய பாலையா, உலகநாதன், மேலப்பாளையம் பகுதி பொருளாளர் எட்வர்ட் ஜான், ஒன்றிய செயலாளர் அன்பழகன், வட்டக் கழக செயலாளர் மாரிமுத்து, படப்பை மனோகரன், மேகை செல்வம்,ஆறுமுகம்,ராஜா காசிமணி, சாமுவேல், மகேஷ் ஆதித்தன், சதீஷ், குணா, புகாரி மகேஷ், கிருஷ்ணன், சேக், ஈஸ்வரமூர்த்தி, வாசுகி செல்லத்துரை, காளிபாண்டியன், ரெங்கா கண்ணன், லாலா குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சி நிறைவில் ஏழை,எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பு ரயில்வே நிலையம் அருகில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் அலெக்ஸ் அப்பாவு, விஜிலா சத்யானந்த், பேச்சிபாண்டியன், தர்மன், கிரிஜாகுமார், பி.எம்.சரவணன், பரமசிவம் ஐயப்பன், அண்ணா துரை, அருண்குமார், சுப்பிரமணியன்,துபாய் சாகுல், கருப்பசாமி கோட்டையப்பன், மீரான்மைதீன், மிக்கேல், நவ்ஷாத் அலி, அனிதா,கருப்பசாமி குழந்தை இயேசு,போத்திகண்ணு,சென்டு, ஆறுமுகம், நெல்லை ரவி, ஷேக் உஸ்மான், ஜலீஸ் ரகுமான்,கல்கி ராஜா,குண்டு பாண்டியன், கண்ணன்,கந்தசாமி, ரத்தினபாலா, கந்தசாமி, தேவிகா, அருணாசலதேவி, சித்ரா பௌர்ணமி, ஜெனி, சிந்து முருகன், உலகநாதன், பேபி கோபால், அந்தோணி, மணிகண்டன், முத்துராமன், ஆவின் கல்யாணி, மாரிமுத்து, பத்மராஜ், மணிகண்டன், கார்டன் சேகர், முருகன், சண்முகசுந்தரம், கவிஞர் மூர்த்தி, அலி, பிரவுஸ் கான் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.தொடர்ந்து நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் ஏழை,எளியவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.